**செ.வெ.எண்: 69/ஜனவரி /2021** **நாள்:21.01.2021**

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரசு குழந்தைகள் இல்லத்தில் ஆற்றுப்படுத்துநர் பணியிடங்கள் (3 பணியிடம் (அதில் ஒருவர் பெண்ணாக இருக்க வேண்டும்) மதிப்பூதிய அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. இப்பதவிக்கு தகுதியான உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் முதுகலைப்பட்டம் பெற்ற நபர்களின் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

----------------

அரசாணை எண்: நிலை.50, சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத்(சந8(1))துறை, நாள்: 28.12.2020 இன் படி, தமிழ்நாடு அரசு, சமூக பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் 36 அரசு குழந்தைகள் இல்லங்களில் 30 இல்லங்களில் (வால்டாக்ஸ், தர்மபுரி, சேலம், பெத்தநாயக்கன்பாளையம், தூத்துக்குடி மற்றும் தென்காசி தவிர்த்து) நிறுத்தி வைக்கப்படும் குழந்தைகளுக்கு ஆற்றுநர்கள் மூலம் மதிப்பூதிய அடிப்படையில் ஆற்றுப்படுத்துதல் (Counselling) சேவை வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி, அரசு குழந்தைகள் இல்லத்தில் ஆற்றுப்படுத்துநர் பணியிடங்கள் (3 பணியிடம் (அதில் ஒருவர் பெண்ணாக இருக்க வேண்டும்) மதிப்பூதிய அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. இப்பதவிக்கு தகுதியான உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் முதுகலைப்பட்டம் பெற்ற நபர்கள், அவர்களது விண்ணப்பங்களை உரிய சான்றின் ஒளிநகலுடன் 10.02.2021 தேதிக்குள் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு வந்து சேரும் வண்ணம் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. தகுதியான நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் வல்லுநர்கள் கொண்ட தேர்வு குழு மூலம் நடைபெறும் நேர்முகத்தேர்வு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

தெரிவு செய்யப்படும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு வருகையின் அடிப்படையில் சேவை வழங்க ஒரு வருகைக்கு (நாள் ஒன்றுக்கு) போக்குவரத்து செலவு உட்பட மதிப்பூதியம் ரூ.1000/- வீதம் (ரூபாய் ஓராயிரம் மட்டும்) வழங்கப்படும். மேலும் விபரம் வேண்டுவோர் திருச்சி மாவட்ட அரசு குழந்தைகள் இல்லக் கண்காணிப்பாளரை தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்.

**<u>விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி</u>**

கண்காணிப்பாளர்,<br>
அரசு குழந்தைள் இல்லம்,<br>
மாத்தூர் (இருப்பு),<br>
ஆவூர் ரோடு,<br>
திருச்சிராப்பள்ளி.<br>
தொடர்பு எண்: 8122906337.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**<br>
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**<br>
**திருச்சிராப்பள்ளி.**